

2023 ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை, சென்னை இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெறவுள்ள 7-வது ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை – 2023 போட்டியில் பங்கேற்க வந்துள்ள, மலேசிய நாட்டை சேர்ந்ர ஹாக்கி வீரர்கள் மற்றும் பயிற்சி யாளர்களுக்கு நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

## குஜராத் மருத்துவ மனையில் தீ விபத்து!

காந்திநகர், ஜூலை 31-

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் சஹிபக் பகுதியில் தனியார் தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமான மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த மருத்துவமனையின் 2வது தளத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.



புதுக்கோட்டை நகர்மன்றத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் விழா சிறப்புரையாற்றி, புத்தகங்களை பார்வையிட்டார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒருங்கிணைப்பாளர் தங்கம்மூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர் திருமதி. செந்தாமரை பாலு, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில்

# இராயபுரம் மண்டலத்தில் ரூ 3.82 கோடியில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. ஆய்வு!

சென்னை, ஜூலை 30-

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு 59, அண்ணா சாலை, சத்திய வாணி முத்து நகரில் 2022 23ஆம் ஆண்டிற்கான வெள்ள நிவாரண நிதியின் கீழ், ரூ.2.77 கோடி மதிப்பிலான புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (29.07.2023) தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, 202223ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு60, அங்கப்ப நாயக்,கன் தெருவில் உள்ள சென்னை உருது பள்ளியில் ரூ.24.50 இலட்சம் மதிப்பில் கட்டடம் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணியினையும், மூர் தெரு மற்றும் போஸ்ட் ஆபிஸ் தெருவில் ரூ.10.50 இலட்சம் மதிப்பில் சாலை பணியினையும் தொடங்கி வைத்தனர்.

பின்னர், வார்டு 56, வெங்கட மேஸ்திரி தெருவில் உள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கான முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார்கள். மேலும், 2022 23ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.35 இலட்சம் மதிப்பில் புதியதாக முதல் தளம் கட்டும் பணியினையும், வார்டு 54க்குட்பட்ட அம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.20 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தும் பணியினையும், ரூ.6 இலட்சம் மதிப்பில் உட்வார்ஃப் 1ஆவது சந்தில் உள்ள அங்கன்வாடி மையத்தினை மேம்படுத்தும் பணியினையும், ரூ.9 இலட்சம் மதிப்பில் சரவணன் தெருவில் உள்ள சாலையோரப் பூங்காவினை மேம்படுத்தும் பணியினையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், யானைகவுனி பகுதியில் மூலதன நிதியின் கீழ், ரூ.27.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்ப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நேற்று (29.07.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், கல்யாணபுரத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலகர்களுக்கு அறிவுறுத்தினர்.

இதன் தொடர்ச்சியாக இராயபுரம் மண்டல அலுவலகத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் (பொது) எஸ்.இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மண்டல அலுவலர் மற்றும் இரயில்வே அலுவலர்கள் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம், மேலாளவந்தசேரி ஊராட்சியில் மாற்றுக் கட்சியை சேர்ந்த 20 குடும்பங்கள் ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச் செல்வன், ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.ஒன்றிய முன்னாள் பொறுப்பாளர் சீ.கோபால கிருஷ்ணன்,மாவட்ட மகளிர் அணி தலைவர் இராணி சேகர், ஊராட்சி தலைவர்கள் ஷீலா மதிவாணன், சோனியா விக்னேஷ்,மாவட்ட பிரதிநிதி சோம.நடேசமணி,கிளை கழக நிர்வாகிகள் மார்ட்டின், தமிழ்செல்வன், சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வே. தங்கபாண்டியன்

### ஜூலை 31 (1997)



தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

"மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழகம் மட்டுமல்ல; உலமெல்லாம் வாழும்

# தமிழ்பேசும் மக்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம் !

திருச்சி, ஜூலை 31 -

திருச்சி தெற்கு மாவட்ட திமுகவின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருக்கோயிலின் அர்ச்சர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருச்சி மாவட்டம். மணப்பாறையில் உள்ள தனியார் திருமண மஹாலில் மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட கோவில் அர்ச்சகர்கள், மற்றும் பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

1970 க்கு முன்பு வரை அறநிலைத்துறைக்கு ஒரு தனித்துறையே இல்லை ஏதோ ஒரு துறையுடன் சேர்த்துதான் இருக்கும். இதன் பிறகுதான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அறநிலையத்துறை என்று தனியாக இருக்கவேண்டும். சட்டமன்றத்தில் அதற்காக தனி நிர்வாகம் நடைபெற வேண்டும். தனி வரவு செலவு திட்டம் இருக்க வேண்டும் என்று அறநிலையத்துறை தனித்துறையாக அமைத்து அதற்கு தனியாக ஒரு அமைச்சர் இருக்கிறார் என்று சொல்லும் அளவிற்கு கலைஞர் செய்துள்ளார். தமிழகத்தில் கோவில்களுக்கு பல்வேறு திட்டங்களை, நலப்பணிகளை செய்யக்கூடிய அரசாக தமிழக அரசு உள்ளது. என அமைச்சர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் சபியுல்லா, மாவட்ட நிர்வாகிகள் அ.த.த. செங்குட்டுவன், லீலா வேலு, மூக்கன், குணசேகரன், ஒன்றிய செயலாளர் ராமசாமி, நகர செயலாளர் மு.ம.செல்வம், திருக்கோவில் பணியாளர்கள், திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த வானகிரியை சேர்ந்த மீனவர் ராஜ்குமார் மீன் பிடிக்க சென்ற போது கடலில் தவறி விழுந்து உயிரிழந்ததையடுத்து அந்த குடும்பத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் ரூ. 1லட்சம் நிதி வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்,ரவி, சீர்காழி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பஞ்சுகுமார் மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

### புதுபாளையம்

## ஜி.பாஸ்கரன் மறைவு!

கடலூர், ஜூலை 31-

கடலூர் மாநகரம் புதுபாளையம் பகுதி செயலாளர் ஜி.பி.வெங்கடேஷ் தந்தையும், கடலூர் மாவட்ட தி.மு.க முன்னாள் மாவட்டக் கழக பொருளாளர், முன்னாள் பொதுக் குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், கடலூர் மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி புறவலர், கடலூர் மாவட்ட அறங்காவலர் குழு தலைவருமான ஜி. பாஸ்கரன் அவர்கள் (வயது 83) உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 28.07.2023 அன்று வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணியளவில் இயற்கை எய்தினார் அவர்களின் இறுதி ஊர்வலமும், நல்லடக்கமும் நேற்று முன்தினம் (29.07.2023) சனிக்கிழமை மாலை 04.00 மணியளவில் தீர்த்தனகிரி குறிஞ்சிப்பாடி ஒன்றியம் கடலூர் மாவட்டம் எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாருக்கு திருமதி. ரேவதி பாஸ்கரன் எனும் மனைவியும், புது பாளையம் பகுதி செயலாளர் பி.வெங்கடேஷ் எனும் மகனும் திருமதி. ஆர்.டி. தேவி சுப்புராஜ், திருமதி. ஆர்.டி.கோமதி துரைராஜ் ஆகிய மகள்களும் உள்ளனர்.

